JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **9/2014** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W.2** | Prosecution /Defence / Court | |
| Name | **Dinesh Kumar** | Caste | |
| Father's Name | **Mani** | Calling | |
| Village | **Jeeva Nagar** | Religion | |
| Taluk | **Perundurai** | Age | |

**A**1 - **Mohammed Taj Maideen**, **A**3 - **Alavudeen Batsha present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 03.09.2024**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு பிரைவேட் கம்பெனியில் ஹெச் ஆர் ஆக வேலை செய்து வருகிறேன். 2013 ம் வருடம் மார்ச் மாத சமயத்தில் என்னுடைய வீட்டிற்கு பின்னால் உள்ள வீட்டில் சீதாராம் என்பவர் என்னிடம் வாடகைக்கு குடும்பத்துடன் குடியிருந்தார். அந்த சமயத்தில் அவருக்கு குழந்தை பிறந்திருந்ததால் அவரது மனைவி அவர்களது சொந்த ஊரான ஆந்திராவிற்கு சென்றுவிட்டார். சீதாராம் மட்டும்தான் அந்த சமயத்தில் வீட்டில் தங்கியிருந்து அக்னி ஸ்டீல் கம்பெனிக்கு வேலைக்கு சென்று வந்தார்.

**2)** கடந்த 12.03.2013 ம் தேதி இரவு வேலைக்காக சீதாராம் சென்றுவிட்டார். அடுத்தநாள் காலையில் 6, 6.30 மணியளவில் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்து பார்த்துவிட்டு என்னிடம் வந்து வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டிருப்பதாகவும், வீட்டில் இருந்த சாமான்கள் சிதறி கிடப்பதாகவும் யாரோ திருடர்கள் வந்து சென்றிருப்பதாகவும் ஆனால் வீட்டில் இருந்த பொருட்கள் எதுவும் திருடு போகவில்லை என்றும் என்னிடம் தகவல் சொன்னார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** எனது வீட்டிற்கு பின்னால்தான் சீதாராம் குடியிருக்கிறார். முன்பகுதியில் நான் குடியிருந்தேன். சீதாராம் வீட்டிற்கு பின்னால் யாருடைய வீடு உள்ளது என்றால்

செந்தில் ஜிம்மிங் பேக்டரி உள்ளது. சீதாராம் வீட்டிற்கு மேபுறமாக ஒரு வீடு உள்ளது. அவர் பெயர் தெரியாது. கிழபுறமாக ஒரு வீடு உள்ளது. அவரது பெயரும் எனக்கு ஞாபகமில்லை. சீதாராமின் வீட்டைச் சுற்றிலும் நான்கு புறமும் வீடுகள் உள்ளது என்றும், இந்த அனைத்து வீடுகளை சுற்றிலும் காம்பவுண்ட் உள்ளது என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீடும், சீதாராம் குடியிருந்த வீடு மட்டும்தான் எனக்கு சொந்தமானது. மற்ற வீடு யாருக்கு சொந்தம் என்று எனக்கு தெரியாது. சீதாராம் என்னிடம் சொன்னபோது அவர் வீட்டை திறந்து உள்ளே சென்று பார்த்ததாக கூறினார் என்றால் சரிதான். நான் சீதாராமனுடன் அவரது வீட்டிற்கு சென்று பார்க்கவில்லை என்றால் சரிதான். தகவல் சொன்னவுடன் போலீசார் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

2) போலீசார் வந்தவுடன் சீதாராம் போலீசாரிடம் அவர் கதவை திறந்து உள்ளே சென்று பார்த்த விவரங்களை கூறினார் என்றால் சரிதான். சீதாராம் என்ற நபர் கதவை திறந்து பார்த்தாகவும் பொருட்கள் சிதறி கிடந்தததாகவும் அதை என்னிடம் சொன்னதாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் குழந்தையாக இருந்தபோது அந்த வீட்டை வாங்கி விட்டார்கள். நான் போலீசார் கேட்டுக் கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

(ஒப்பம்)
நீதித்துறை நடுவர்,
பெருந்துறை